சிவமயம்

# இந்து சாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞூ ஆடி மீ ௩-உ வெள்ளிக்கிழமை (19-7-1974) [இல: கஅ

# சைவமாநாடு 26-ல் ஆரம்பம்

## விழாத் தலைவர் வியாழன் வருகிறார்

சைவபரிபாலன சபையாரின் 86-வது அகில இலங்கைச் சைவமாநாடு 26, 27, 28-7-74 ம் திகதிகளில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். அண்ணாமலைப் பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் துணைப் பேராசிரியர் சி. இராமலிங்கம் அவர்கள் விழாத் தலைவராக இருந்து சிறப்புரைகள் நிகழ்த்துவார்கள்.

விழாத் தலைவர்



திரு. சி. இராமலிங்கம்

சைவ பரிபாலன சபையாரின் அகில இலங்கைச் சைவமாநாடு எதிர்வரும் 26-ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும். சித்திரைத் திங்களில் நடைபெறவிருந்த இம் மாநாடு மாநாட்டுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் அவர்களுக்கு விசாபெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் காலவரையறை இன்றிப் பிற்போடப்பட்டது. இப்பொழுது இலங்கை அரசு விழாத் தலைவரின் இலங்கை வருகைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் சிதம்பரம் ஆறுமுக நாவலர் உயர்நிலைப்பள்ளி தர்மகர்த்தாச் சபைக் கூட்டத்திற் கலந்து கொள்வதற்காக சென்ற 11-7-74 அன்று தமிழ்நாடு சென்றிருந்தார். அவர், அங்கு திரு சி இராமலிங்கம் அவர்களை நேரிற் சந்தித்து மாநாடு பற்றிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்கள்.

அகில இலங்கைச் சைவ மாநாடு திட்டமிட்டவாறு மூன்று தினங்களுக்கு நடைபெறும். முதல் நாள் நிகழ்ச்சி வண்ணை சிவன்கோவிலில் இருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகும். மாலை நாலு மணியிலிருந்து இரவு பத்து மணிவரை முதல் நாள் நிகழ்ச்சி நடைபெறும்.

இரண்டாம் மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் காலை, மாலை இரு நேரங்களிலும நடைபெறும். விரிவான நிகழ்ச்சிநிரல் பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை நமக்குக் கிடைக்கவில்லை எனினும் 24-ம் திகதிக்கு முன் நிகழ்ச்சிநிரல் வெளியாகிவிடும் என்று சபைச் செயலாளர் திரு. வை. இரகுநாதமுதலியார் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் நமது நிருபருக்கு அளித்த பேட்டியில் விழாத்தலைவர் திரு சி. இராமலிங்கம் அவர்கள் 25-ம் திகதி இலங்கை வருவார் என்றும் சபைத் தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் 23-ம் திகதி இலங்கை திரும்புவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள். மாநாட்டில் முப்பதுக்கு மேற்பட்ட இலங்கை உரைஞர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்றும், மூன்று நாள் இரவும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும என்றும் கூறியுள்ளார்கள்.

## சிவபாதசுந்தரனார் நினைவுதினம்

சைவப் பெரியார் திரு. சிவபாதசுந்தரம் அவர்களது பத்தொன்பதாவது நினைவு தினம் எதிர்வரும் 24-7-74 புதன்கிழமை மாலை 2-30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. க. கிருஷ்ண பிள்ளை அவர்கள் இந் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்குவார்கள்.

சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபராக பல ஆண்டுகள் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கல்யாணப் பூசணிக்காய்

இது உட் காய்ச்சல், பித்தக் காய்ச்சல், என்புக் காய்ச்சல் ஆகிய காய்ச்சல்களைத் தீர்க்கும். இது மருந்தை முறிக்கும். பேய்ச்சோறி, மேகநோய், பயித்தியம இவைகளுக்கு இது நலல மருந்தாகப் பயன்படுகின்றது. செந்நீர்ப் பெருக்கைத (பெரும பாடு) தடுக்கும. சிறுநீரைப்பெருக்கும. உடலை உரமுடைய தாக்கித் தேற்றும்.

ஆதாரம்: 'பஞ்ச சீலம்',
உதவியவர்: மில்க்வைற்.

## குறிக்கோளில்லாத வாழ்க்கை சுக்கானில்லாக் கப்பல்போன்றது

### வில் வளைத்த தியானம்

[திரு. நா. செல்லப்பா அவர்கள்]
(இலங்கை மெய்கண்டார் ஆதீன விரிவுரையாளர்.)

[3-7-74 அன்று வீரமாகாளி அம்மன் கோவில் முன்றலில் வைத்து இலங்கை ஒலி பரப்புக கூட்டுத் தாபனத்தினா ஒலிப் பதிவு செய்து கொணட கட்டுரை இது.]

குறிக்கோளில்லாத வாழ்க்கை சுக்கானில்லாக் கப்பல் போன்றது. குறித்த இடத்துக்குக் கப்பல் செல்ல வேண்டுமாயின் அதனுடைய சுக்கான் சரிவரச் செயற்படுதல் வேண்டும். இன்றேல் அது சமுத்திரத்தைச் சுற்றிச் சுற்றி அலைய வேண்டியதுதான். சம்சார சாகரமாகிய கடலிற் சுழல்கின்ற நமது நிலையும இத்தகையதாகும். நாம் பிறவிப் பெருங் கடலைத் தாண்ட வேண்டுமாயின் முதலில் தெளிவான குறிக்கோள் உடையவர்களாகுதல் அவசியமாகும். காற்றில் அலைகின்ற சருகைப் போலும், சேற்றில் நிற்கும் குற்றியைப்போலும், ஆற்றில் உருளும் கல்லைப் போன்றும நிலையில்லாத தலைமையில் நமது மனம் இருக்குமாயின் குறிக்கோளை அடைதல் சாத்தியமாகாது. துன்பக் கடலைத் தாண்டும் நெறியை நமது சமயம் "தாரணோபாயம்" என்கிறது. இதன் விளக்கம் சிவோகம் பாவனையாகும்.

இப்பொழுது நாம் இதைப் பற்றித் தியானிப்போமாக! தியானிப்பதற்கு முன்பு இதற்கு வேண்டிய ஆன்ம சுத்தியைத் தற்காலிகமாக எனினும் பெறுவோம். ஆன்மாவினுடைய பரிசுத்தத்தன்மையிலேயே தியானத்தின் பெறுபேறு தங்கியுள்ளது இறைவனாகிய பதியைக் குறிக்கோளாக வைத்து நமது தியானத்தைத் தொடங்குவோம். இத்தகைய சாதனையைச் சைவ நெறியில் வில் வளைத்த தியானம் எனக் கொள்வோம். இதில் பஞ்சாட்சரமே வில்லாகும. பக்தி சிரத்தை அதன் நாண் ஆகும், நமது ஆன்மா அம்பாகும. நமது குறிக்கோள் சிவப் பேறாகும். ஆன்மாவாகிய அம்பு கூர்மையுடையதாக இருக்கவேண்டிய தவசியம். இன்றேல் அது பதியாகிய இலக்கைத் தொளைத்து அதிற் பதியமாட்டாது. துருப் பிடித்த அம்புத் தலையை வேடுவன் தீட்டிக் கூராக்குதல் போன்று, நாமும் நமது மனத்தையும் ஆன்மாவையும் பரிசுத்தம் செய்து ஒளி உற ஆக்குவோம். ஆன்மா பரிசுத்தம் அடைதலே தீட்சையாகும். இதற்கு ஆதாரமாக உள்ளது நாம இறைவனிடம் பூணும் பக்தி சிரத்தையேயாகும். "சிரத்தை உடையோன் ஞானம் அடைவான்" என்கிறது சிவாகமம். எவ்விதமான பிரதிபலனும் கருதாது சிவ புண்ணியமாகச் சரியை, கிரியை யோகம் ஞானம் ஆகியவற்றை அகப் பூசையாகச் செய்வோம்.

சைவ நற்சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் நாம் இக் கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் கொண்டு சிவத்தியானத்தில் மெய்மறந்து இலயிப்போமாக! பஞ்சாட்சரமாகிய வில்லை எடுத்து "சிவாய நம சிவாய நம, சிவாய நம" என மௌனமாக உச்சரித்து வளைப்போம், பக்திசிரத்தை யாகிய நாணைத் தொடுப்போம். ஆன்மாவாகிய அம்பைச் சிரத்தையாகிய நாணில் ஏற்றுவோம், அவன் அருளாலே அவன்தாள் வணங்கி சுத்த சக்தியைப் பெற்று இந்த அம்பை — ஆன்மாவை — குறித்த இலக்குத் தவறாது — சிவப் பேற்றை நோக்கி எய்வோமாக! ஆன்மாவாகிய அம்பு மேல்நோக்கி 'விர்' என விரைந்து கிளம்புகிறது. நாமே அதுவாகப்

வளர்ச்சி 2-ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்

ஆனந்த வரு ஆடி மீ ௬-உ வெள்ளிக்கிழமை [1974]


## கீழ்ப்படிதல்

வருத்திவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்தி வளையாத மூங்கில — தரித்திரராய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக் கீழ்த் தாம்.

இளமையிலே பிதா, மாதா, உபாத்தியாயர் முதலிய முதியோர்களால் வருத்திப் பயிற்றப்பட்டவர்கள் பெருந்தன்மை கல்வி முதலியவற்றாற் சிறப்படைவார்கள். அப்படிப் பயிற்றப்படாதோர் பெரியோர்களால் இகழப்பட்டுத் தரித்திரராய் அலைந்து கீழ்மக்களாய் வாழ்வார்கள். இவ்வுண்மையை மேலே காட்டியுள்ள நீதிவெண்பாச் செய்யுள் சிறந்த உவமையினால் விளக்குகின்றது. ஒரு காட்டின் கண்ணுள்ள ஒரு நீண்ட மூங்கிலை ஒரு அரசனுடைய ஏவலாளர்கள் வருத்தி வளைத்து பாகம்பண்ணி அதனை அரசனுடைய பல்லக்கின் ஓர் அங்கமாகச் சேர்த்தபின் அது அரசனுடைய தலைக்கு மேலே ஒரு வில்லாக வளைந்து சிறப்படைகின்றது. அங்ஙனம வருத்தி வளையாத மூங்கில் கூத்தாடிகளுடைய காலின்கீழ் அமர்ந்து கீழ்மைப்பட்டிருக்கும். வளைத்துத் தனபமடைந்த மூங்கில் அரசனுடைய முடிக்குமேல் சிறப்படைகின்றது. அங்ஙனம் வருத்தி வளையாத மூங்கில் கூத்தர்களுடைய காலின் கீழ் அமர்ந்திருக்கின்றது.

வருத்தி வளைந்த மூங்கில்; சிறுவயதிலே முதியோர்களால் தண்டிக்கப்பட்டு வளரும் பிள்ளைகளுக்கும்; வருத்தி வளையாத மூங்கில் முதியோர்களால் தண்டிக்கப்படமாமல் தன்னிஷ்டமாக வளரும் பிள்ளைகளுக்கும் உவமானங்களாகும்.

பிள்ளைகளைச் சிறுவயதில் பெரியோர்கள் தண்டித்து அடக்கமாக வாழச்செய்தால் அப் பிள்ளைகள் வளர்ந்தபின் பெருமையுடைய பிரபுக்களாய் வாழ்வார்கள். அங்ஙனம் பெரியோர்களால் அடக்கப்பெற்று வாழாத இளைஞர்கள் வளர்ந்தபின் சிறுமைப்பட்டு வாழ்வார்கள். கீழ்ப்படிதல் இளைஞர்களுக்கு அவசியம் தேவைப்படும் ஒழுக்க முறையாகும். இளமையில் கீழ்ப்படிவாக வாழப் பழகியவனே முதுமையில் பிறரை ஆளக்கூடியவனுவான. கீழ்ப்படிதல் ஒருவனுடைய அறிவு வளர்ச்சிக்கு வித்துமாகும். "Obedience is the beginning of Wisdom" என்ற ஆங்கில முதுமொழியும் இக் கருத்தை வலியுறுத்துகின்றது.

இக்கால மாணவர்கள் இப் பொன் மொழியைக் கருத்தில் வைத்து தாய, தந்தையர், உபாத்தியாயர் முதியோர்களுக்குக் கீழ்ப்படிவாக வாழ்வார்களாக.

## நாவலர் பிள்ளைத்தமிழ்

ஆக்கம் : — "பழைய பாணி" —

(முன் வளர்ச்சி — 31)

ஏழாவது :- அம்புலிப் பருவம்.

உத்தமனென வுண்மையா லுலகுதொழ வைகலா
லோவா தியங்கு திறலால்
உட்களிப் புதவலா லுயர்கதிச் சேறலால்
உருவேறு திருவே றலால்
மெத்துவிர கர்நலிய வெயிலெனக் காய்தலால்
மேவுதண் ணளி யுடைமையால்
வெண்ணிலா மதிநினுட னுண்ணிலா வொப்புமை
விழைந்துனை யழைத்தனன் காண்
சித்தசிவ தவயோகி செல்லப்பர் நடனமகிழ்
திருவடிப் பரிசமார்பூ
தேவிமெய் விடர்த்தனைய செவ்வியீ ரந்துறமு
திருவீதி யுலாம கிழ்ந்தெம்
அத்தனுறை நல்லைவள ராறுமுக ஐயனுட
னம்புலீ யாட வாவே
அழகுதமிழ் த்துறையவரு மாசானெ மையனுட
னம்புலீயாட வாவே.

அணிந்துரை அரங்கம்

## பருளை விநாயகர் ஊஞ்சல்

ஆக்கியோன் :

சித்தாந்த வித்தகர் கலாநிதி
க. கணபதிப்பிள்ளை பி. ஏ.
(மகாவித்துவான் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)
சுழிபுரம் சைவ சித்தாந்த சங்க வெளியீடு

சுழிபுரம் நமது நாட்டில் சைவமும் தமிழும் வளர உழைக்கும் பெரியோர்கள் வாழ்கின்ற ஒரு கிராமம். அங்கு செழிப்பான நெல்வயல்கள் சூழ்ந்த பருளை என்னும் பதியில் விநாயகப் பெருமானுக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கும் அருகருகாக இரு ஆலயங்களுண்டு. அங்குள்ள பருளாய விநாயகராலயம் மிகவும் புராதனமானது. பருளை விநாயகர் பள்ளு மிகப்பழைய இலக்கியமாகவுள்ளது. பருளை முருகன் மீது சுழிபுரம் பாவலர் கதிரித்தம்பி ஆறுமுக உபாத்தியாயர் ஓர் ஊஞ்சல் பாடியுள்ளார். அத்தகைய புராதனமான பருளை எனும் பதியிலுள்ள விநாயகப் பெருமான மீது சித்தாந்த வித்தகர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை பி. ஏ. அவர்கள் ஓர் ஊஞ்சல் பாடியுள்ளார். பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்களும் சாற்றுக்கவி உதவியிருக்கின்றார். ஆக்கியோன் சுழிபுரத்தைச்சேர்ந்தவர். வேதசிவாகமப் பற்றும் சைவ சாதனங்களைப் போற்றும இயல்பும் வாய்ந்தவர். இனிய தமிழ் நடையில பக்தி சுவை சொட்ட நூல் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆசிரியருடைய சைவ சித்தாந்த அறிவை விளக்க நூலிலிருந்து ஒரு செய்யுளைத்தருகின்றோம்.

உங்கைதலைச் சிரமீது பத்தர் வைத்தே
ஐந்தெழுத்தின் உட்பொருளைத் தெளியும் போழ்து
சங்கைபெறத் திரோதான சகதி தனைச்
சார்தருநற் சிவசத்தி யாகச் செய்து
தங்குமவர் ஆகாமி யததை விட்டிச்
சாதருசஞ் சிதவினையுள் யாவு மோட்டிச
பங்கயமாந் திருவருளைப பொழியுந் தேவே
பருளையுறை விநாயகரே ஆடீர் ஊஞ்சல.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல. M. B. 10086

காரைநகர் குமாரவேலு கந்தையா — வழக்காளி
எதிராக
சண்டிலிப்பாய் வடக்கு ஆள்வாப்பிள்ளை மாணிக்கம்
சண்டிலிப்பாய் கைம்பெண் பூரணம் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M B 10086ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் வரு ஆவணி மீ 21-ம் திகதி (21-8-74, புதனகிழமை முற்பகல 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: ரூபா 18,825/-ம், 19-6-68 தொடக்கம் 3-2-69 வரைக்கும் ரூபா 15 000/-க்கு 12 வீத வட்டியும் அதன். பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றுக இறுபடும் வரைக்கும 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 440 - 59 சதமும் 29-11-69 இல் கட்டப்பட்ட ரூபா 7,000/- கழிக்கப்படவேண்டும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை 'வட்டுவினி' (Vadduvini) நிலப்பரப்பு 3ம மூன்று கடைக சட்டிடங்களு'; கல்வீடும தெற்குப் பக்கத்திலிருக்கும சிறை றறிய பங்கும ஊழி வாய்க்காலும் செய்பயிர் வானபயிரும எல்லை கிழக்கு:- காங்கேசன் துறை வீதி, வடக்கு:- குட்டித்தம்பி பெண் செல்லமுத்துவின ஆதனம், மேற்கு:- கந்தையா பெண் ஆச்சப்பிள்ளையின உரிமையாளரின் ஆதனம், தெற்கு:- அமெரிக்கன் மிஷனுக்குரிய ஆதனம் இதடங்கலும். H 3 8/203 இல் பதியப்பட்டது.

செ பாண்டித்துரை
கொமிஷனரும, விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
D. C. Jaffna

மலலாகம்.
10-7-74

11-7-74
12 13, 19-7

சைவநெறியை ஒழுங்குபடுத்தியவர்

## சேக்கிழார் பெருமான்.

### மதுரையில் தருமை ஆதீனம்

[நமது சிறப்பு நிருபர் ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

திருதருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ. ல ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஞானபீடம் ஏற்றபின்னர், முதல் முறையாக மதுரை நகருக்கு சேக்கிழார் பெருமானின் குருபூசைத் திருநாள் அன்று எழுந்தருளிய போது, மதுரை நகர பெருமக்களுடைய சிறப்பு [illegible] மக்களுக்கு வாழ்த்துரை வழங்குகையில், இன்று சேக்கிழார் பெருமான் குருபூசைத் திருநாள், சைவம் எனனும் பெருங்கட்டிடத்தை ஒழுங்கு படுத்தி வளர்த்துக் கொடுத்த பெருமைக்குரியவர் சேக்கிழார் பெருமான் சைவமரபைக் காத்து வளர்த்த பெருமைக்கும் உரியவர், அப்பெருமான் இறையடி சேர்ந்த சிறந்த நாளாகிய இப்புனித நாளில் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானைத் தரிசிக்கும் பேறு நமக்குக் கிடைத்தது திருவருட் செயலால் கிடைத்த சிறப்பாகும் என்று கூறினார்கள்.

(வளரும்)

## கலை நிகழ்ச்சி

சைவ பரிபாலன சபையின் அகில இலங்கைச் சைவ மாநாட்டில் திருப்பூங்குடி ஆறுமுகம், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் ஆகியோரது இசையிடையிட்ட பிரசங்கம் நடைபெறும்.

### நினைவுகூர்வோமாக

புத்தூரில் சிவனடிக்கன்பு பூண்டொழுகி வந்த உயர்ந்த சைவ வேளானகுடியில் தோன்றிய பெரியார் திரு. சுப்பிரமணியம சதாசிவம் அவர்கள 1-7-73ல் சிவபதமடைந்தனர். அவருடைய ஆட்டைத் திதி அவருடைய புத்திரன சட்டத்தரணி திரு. ச. யோகேஸ்வரன் அவர்களால 17-7-74 அன்று சிறப்பாகப் புரியப்பட்டது. அவர் தமிழ்மொழி வளர்ச்சிக்கும சமயவளர்ச்சிக்கும சமூக முன்னேற்றத்துக்கும் படாடோபமின்றி அயராதுழைத்தவர். அவருடைய தன்னலமற்ற வாழ்க்கையை நமது மக்கள பின்பற்றி வாழுதல நமமைப்பக்கும். அவருடைய வாழ்க்கையை மக்கள் நினைவுகூருப முறையில் இச் செய்தி வெளியிடப்படுகின்றது.

## குறிக்கோளில்லாத

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

பாவனைசெய்து செல்கிறோம். கானலை நீர் அல்ல எனத் தெளிவுறுகிறோம். இதோ! நம்மை நாமே மறந்த நிலையில் — திருச்சிற்றம்பலமாகிய அகண்டாகாரத்தில் — பரிபூரணத்தை நாடி — உயர உயரப் பறக்கிறோம். பூமியில் இருந்தபோது ஒன்றுக்கொன்று வித்தியாசமாகத் தெரிந்த பொருட்கள் யாவும் இப்போ வேற்றுமையற்று ஒரே பச்சையாகத் தெரிகிறதே! இதுவே அபேத ஞானமாகும. என்ன ஆனந்தம்? இதை என்னென்று சொல்வது? வர்ணிக்க வார்த்தைகள் இல்லையே! சிவ சிவ என்றுதான் சொல்ல முடிகிறது.

நமது பரிசுத்தமான ஆன்மா இதோ சிவப்பேறுகிய இலட்சியத்தைத் தொளைத்துக் கொண்டு அத்துடன் இரண்டறக் கலக்கிறது. பூவும் மணமும்போல, மணியும ஒளியும்போல நாம் சிவோகம் பாவனையில் அந்நியமின்றி அவனே யாகிவிடுகிறோம். அம்பு பாய்ந்த அதிர்ச்சியில் நாம மூர்ச்சையாகிவிடுகிறோம். சமாதியாகிய நிட்டை எய்துகிறோம். ரீங்காரம செய்து பூவை வட்டமிட்ட தேனீ இப்போ மௌனமாகப் பூவில் அமர்ந்து சிவமாகிய பேரின்பத் தேனைப் பருகுகிறது! ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி.

இவ்விதம் நாம் காலையும் மாலையும் சிவோகம் பாவனை செய்து கடைத்தேறுவோமாக. இதுவே இலங்கை மெய்கண்டார் ஆதீனம் விடுக்கும் அன்புப் பிரார்த்தனையாகும். ——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு

## விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ, இல. M. B 13867

(1) மயிலிட்டி தெற்கு தெல்லிப்பளை இளையதம்பி சின்னத்தம்பி
(2) ஷி யூர் பெண் மாணிக்கம் — வழக்காளிகள்

எதிராக

வட்டாரம் இல: 6 மண்டைதீவு நாகலிங்கம சதாசிவலிங்கம் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13867ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை என்னுல் 1974ம் ஆ. ஆவணி மீ 19ம் திகதி (19-8-74) திங்கட்கிழமை முறபகல் பத்து மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்

தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூபா 3910-00ம். ரூபா 3000-00க்கு 4-6-1973 தொடககம் 17-12-1973 வரைக்கும் 10 வீதமான வட்டியும் அதன் மேல் முழுதொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 456-22 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று மண்டைதீவுஇறை 'கொவ்வைக்குளி, 8 ஏககர் 3 றூட்ஸ் 11 பேர்ச் எல்லை கிழக்கு:- யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வரன கோவி லாதனம, வடக்கு:- ஈடு வாங்கற்காரரின் ஆதனமும் முடிக்குரிய நிலமும், மேற்கு:- முடிக்குரிய நிலம், தெற்கு:- சண்முகரெத்தினம் பெண பார்வதபத்தினிக்குரிய வாதனமும் முடிககுரிய நிலமும் இதடங்கலும அதைச சேர்ந்தவைகளும்.

வை ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்

காரைநகர்
1974ம் ஆு ஆனி மீ
18ம் திகதி — 113-74

---

கோட்டு விற்பனவு

## விளம்பரம்

வழ: இல. M B 12193

யாழ்ப்பாணம் கொக்குவில கிழக்கு கனசபை கைம் பெண் சோதிப்பிள்ளை — வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் வணணுர்பண்ணை கிழக்கு 1. நாகமணி சுப்பிரமணியம் 2 பெண திலகவதி — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B 12198-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1974-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 20 திகதி (20-8-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப் படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 4554/-ம் இதில் ரூபாய் 2300/-க்கு 26-12-70 திகதி தொடக்கம 13-6-73 வரைக்கும் 100க்கு 12% வட்டியும் பின திகதி தொடக்கம இறுபடும் வரைக்கும் 100க்கும 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 646-20 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற பற்று வண்ணுர்பண்ணை வட கிழக்கிறை இத்திக் கிணற்றடியும் இத்த் தறையும நிலப்பரப்பு 2-ம் குளி 2-ம இது உததரவு பெற்ற உலாந்தா யே. மனுவலால 10-9-1955-ல் 690-ம் இலக்கப்ப டத்தில் வரையப்பட்டதும் செய்பயிர் வான் பயிர்களும எல்லை கிழக்கு:- வயிரவர் கோவிலுக்குரிய ஆதனம். வடக்கும்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னத்துரை தாயுமானவர், அளவெட்டி வடக்கு — வழக்காளி

வழ. இல. M. B. 12003 எதிராக

முத்துக்குமாரு பாலசிங்கம், தலையாளி கொக்குவில் — எதிராளி

*யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12003-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆு ஆவணி மீ 20-ம் திகதி (20-8-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னுல் விற்கப்படும்.*

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 13,600/-ம் 19-9-70 தொடககம் 6-5-71 வரைககு 10,000/- ரூபாய்க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுககும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 537 சதம் 99. அதாவது ஏற்பட்ட செலவு ரூபாய 23 சதம் 91 வெலியாததுச் செலவு ரூபாய் 103-ம் இனிமேல் ஏறபடும் செலவு ரூபா 103 சதம 08. இதில் 7-11-71 ல் கோட்டுச் செலவால கொடுபட்ட தொகை ரூபா 250/-ம் முழுத் தொகையால கொடுபட்ட தொகை ரூபா 1000/- கழிவாக. மேலும் 24-6-74 இல் எனககு இட்ட கோட்டுககட்டளையின்படி விற்பனையில் ரூபா 4000/-ம் கழித்து மிகுதிக்கு விற்பனை செய்யும்படி கட்டளை இட்ட பிரகாரம் விற்பனை செய்யப்படும்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக்கும் டிவிஷனும் வண்ணுர்பண்ணை கோயிற்பற்று வண்ணுர்பண்ணை தென்மேற்கு இறை "பிள்ளையானவயல்; பிள்ளையான் குளத்துத் தலைமேடை"

இக்காணி யாழ்ப்பாணம் காணிககநதோர் D 269/297 இலக்கத்தால் பதிந்ததும மேலும D 226/17 இலக்கமுடைய பதிவால் குறிககப்பட்ட பரப்பு மரக்கால் இலா 26, 3/8, ஆனுல் அளவையின் படி கணககிட்டு கணித்து எழுதப்பட்ட பர நெல் இலா 28, 3/8 ம் இவ் முழுக்காணியை 1963ம ஆண்டு ஆடி மாதம் 26-ந் திகதி உத்தரவுபெற்ற உலாந்தா S. ஏகாம்பரம் அவர்களால் தயாரிக்கப்பட்ட படத்தின் இலக்கம் 409. இப்படத்தில் வடகிழககுப் பக்கமாக பிரிதது 'லோட் 3'' 'Lot 3' என்று அடையாளம வைககப்பட்ட துண்டு பர நெல் இலா 8 ம் குளி 6/5

மேற்குறிக்கப்பட்ட 409 ம் இலக்கப்படத்தால் பூர்த்தியாய் தயாரித்து பிரித்து 'லொட் 3' 'Lot 3' என்று குறிககப்பட்ட நெல் பர இலா 8 ம் குளி 6/5 க்கு எல்லைகள்.

கிழககு இவ்வழக்கில் சடஞளியான முத்துக்குமார் பாலசிங்கத்தின் ஆதனம. வடக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலின் ஆதனம். மேற்கு முப்பது அடி (30) அகலமுடைய புது வீதி, தெற்கு இருபது அடி (20) அகல ஒழுங்கைக்காக ஒதுககப்பட்ட மேறகுறிகக படததில் உள்ள 4-ம இலக்கத் துண்டு. பதிவு இலக்கம D 340/106.

ஏ பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும்
விலை மதிப்பாளரும்

107, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்,
9-7-74 — 110, 12-7-74

---

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் (இல: 24,89), முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அடைவு பிடிக்கும் திருமதி. மு. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1969ம் ஆு ஆனி மீ 28ம் திகதி தொடக்கம் 1973 ம ஆு சித்திரை மீ 30 ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீடகப்படாதிருக்கும் அடைவு நகைகள் யாவும் என்னுல் 1974 ஆு புரட்டாதி மாதம் 11 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம ஷி அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
ஏல விற்பனையாளர்,
**Auctioneer**

காரைநகர். 10-7-1974

---

கோட்டு விற்பனவு

## விளம்பரம்

வழ: இல. M B 12660

நாகலிங்கம கந்தையா கைம் பெண் லட்சுமி பூதனடைப்பு காரைநகர் மேற்கு காரைநகர் — வழக்காளி

எதிராக

1. செல்லன் நடராசாவும்
2. பெண நாகேஸ்வரி

காமாட்சி கேணியடி காரதீவு மேற்கு காரதீவு — எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 12660 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1974ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21-ம் திகதி (21-8-74) புதன்கிழமை முற்பகல் 10 மணிககு அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் என்னுல் விற்கப் படும.

தீர்வைத் தொகை:- ரூபா 4346/66 சதம பின் 24-7-71 தொடக்கம் 22-2-73 வரை ரூபா 4000/- 8 வீதவட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 435/05 சதம் இதில் 500 ரூபா குறைவாகவும் கோட்டுச் செலவால் 150 ரூபா குறைவாகவும் மேலும் ரூபா 1000/- குறைவாகவும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரதீவு கோவிற்பற்று காரதீவு வடக்கு "முத்திக் காத்தான் புலம்" ப. நி. 17-ம் குழி நாலும் ஆனுல் சேவை K. K. அம்முறுள்ளின் பிளான் 568-ல் 14-4-69 திகதி இடப்பட்ட பிளானுக்கு சுமைவாக ப. நி. 17ம் குழி 9-16 ம் லொற் 2 ஆக இந்தப் பிளானில் காட்டப்பட்டதுக்கு சுமைவாக ப நி. 7-ம் குழி 12-62 இதில் லொற் 2 க்கு தெற்கு பக்கமாக ப. நி 5-ம் பனைகளும் இதற்கு எல்லை கிழக்கு பரமநாதர் முத்தையாவுக்குரிய ஆதனம் வடக்கு இதன் மிகுதி ஆதனம் மேற்கு மயிலன் சிவபாதத்துக்கும் மயிலன் திருநாவுக்கரசுக்குரிய ஆதனங்கள் தெற்கு கந்தன் கைம் பெண் சின்னத்தங்கத்துக்கும் கந்தன் முருகேசுவுக்குரிய ஆதனககள் இதில் மேற்படி 568-ல பிளானில் காட்டப்பட்ட கையொழுங்கைக்கு இதால் போக்குவரத்து உரித்தும் இது அடங்கலும்.

மேற்கு:- ஒழுங்கை தெறகு:- சோமசுந்தரம மார்க்கண்டுவின் உருமைககாரருக்குரிய ஆதனம இதடங்கலும் இன்னும் தெற்கேயிருக்கும் கிணற்றல் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால பாவிப்புரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிசனரும விலைமதிப்பாளரும்

சி. சே மாரிமுத்து
கொமிஷனரும்,
விலை மதிப்பாளரும்.

தெல்லிப்பழை, 27-6-74 — 106/12-7-74

---

# Auction Sale

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில், வழ. இல 8912

1. ஜேம்ஸ் ஜெயராசாவும்
2. பெண் லில்லி ஜெயராசாவும். கரவெட்டி மேற்கு கரவெட்டி — வழக்காளிகள்

எதிராக

1. செல்லமுத்து மகாலிங்கமும்
2. பெண் சிவபாக்கியமும், புலோலி கிழக்கு, பருத்தித்துறை — எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1974ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம திகதி (5-8-74) திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மதிக்கப்பட்ட விலை ரூபா 10,800/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி கிழக்கு வென்றிபாகு தேவன் குறிச்சி 'குருமணல்' நி. பர 1 குளி 11, 2/3இல் அடங்கிய வீடும். உலாந்த மேஸ்தர் M. வேலுப்பிள்ளை அவர்களால 1939ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி 438ம இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதுமான படத்திற் கண்டிருக்கும் 1ம் நம்பர் துண்டுக்கு எல்லை கிழக்கும் வடக்கும்:- வெஸ்லியன் மிஷனுக்குரிய ஆதனம். மேற்கு:- வேலுப்பிள்ளை கைம்பெண் சின்னம்மாவுக்கும மறுபேருக்குரிய ஆதனம. தெற்கு:- ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம். கொட்டில், கல்வீடு அடங்கலும்,

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபா | 9835 00 |
| 24-11-65 தொடக்கம் 18-6-66 வரை ரூபா 7000/-க்கு 9 வீத வட்டி | ,, | 350 00 |
| 14-6-66 தொடககம் 11-4-70 வரை ரூபா 10185/-க்கு 5 வீத வட்டி | ,, | 1951 00 |
| | | 12136 00 |
| கொடுபட்ட பணம் ... ... | ,, | 5000 00 |
| மிகுதி ... ... | ,, | 7136 00 |
| 2-4-70ல் கொடுபட்ட பணம் | | 1000 00 |
| | ,, | 6136 00 |
| 3-4-70 தொடக்கம் 2-4-71 வரை ரூபா 6136/-க்கு 5 வீத வட்டி | ,, | 306 80 |
| | | 6442 80 |
| 22-11-71ல் கொடுபட்ட பணம் | ,, | 2000 00 |
| | | 4442 80 |
| 23-11-71 தொடக்கம் 19-5-73 வரை ரூபா 4442-80க்கு 5 வீத வட்டி | ,, | 333 00 |
| | | 4775 80 |
| கோட்டுச் செலவு | ,, | 288 52 |
| | ,, | 5064 22 |
| 20-5-73 தொடக்கம் 26-11-73 வரை ரூபா 5064-32க்கு 5 வீத வட்டி | ,, | 127 00 |
| | | 5191 32 |
| 27-11-73 தொடக்கம் 5-8-74 வரை ரூபா 5191-32த்து 5 வீத வட்டி | ,, | 178 46 |
| அறவிடவேண்டிய தொகை | ரூபா | 5369 78 |

க நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி. 11-7-74 — 117-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 12360

சபாபதி இராசகுலசிங்கம் அச்சுவேலி வடக்கு, — வழக்காளி

எதிராக

சித்தன் கந்தையா அச்சுவேலி வடக்கு, — எதிராளி

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டின் M B 12360-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணியை 1974-ம் ஆு ஆவணி மீ 19-ம் திகதி (19-8-74) திங்கட்கிழமை முற்பகல் 10-30மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைதொகை:- முதல் வட்டி ரூபாய் 30,215/-ம் 9—3—71 தொடககம் 8—6—72 வரைக்கும் ரூபாய் 20,000/-க்கு 10 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 650 . 81 சதம இதில் செலவு ரூபாய் 600 + ரூபா 10,000 கழிதது

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப பிரிவு அச்சுவேலி கோவிற்பற்று அச்சுவேலி வடக்கு இறை 'கொல்லை' நிலப்பரப்பு 33ம 13½ குளியும் கிணறும் இதில மேற்குப் பக்கமாக பிரிக்கப்பட்ட நிலபபரப்பு (10) பத்து வான் பயிர்களும் செய்பயிர்களும் கடைகளும படமாளிகையும கொண்ட ஆதனம, இப் பத்து நிலப்பரப்பின எல்லைகள: கிழக்கு:- வெளளையர் பொன்னர், வடக்கு:- கிராமச் சங்கமும், பஸ் நிலையமும். மேற்கு:- றோட்டு. தெற்கு:- முழுக்காணியால விலததப்பட்ட ஒழுங்கை, இது அடங்கலும தெறகேயுள்ள கிணற்றில் பங்கும அதற்குரிய வழிவாய்க்கால் உரிமையும் கொண்ட ஆதனம. பதிவு யாழ்ப்பாணம் 252/43

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனர், விலைமதிப்பாளர்

அச்சுவேலி வடக்கு
வட்டுககோட்டை, 24-6-74. — 100-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் எம்முடன் ஆங்கில மொழியில் தொடர்புகொள்ளுமாறு நாம் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

# மேற்கு நைஜீரியாவுக்கு

# ஏற்றுமதி

வெல்டிங் மின்வாய்கள் நுண்ணிய வளைவுடன் 2 மி. மீ.,
மோட்டார் வாகனங்களுக்குரிய "வின்ட் ஸ்கிறீன்",
ட்ரன்சிஸ்டர் கசற் ரேப் றெக்கோடர்கள்,
கார் கார்ட்றிச் பிளேயர்ஸ்,
பெஸ்பெக்ற் 5 மி. மீ., அளவு 8' × 4', 6' × 4'
விமான அஞ்சற் கடித அட்டைகள்,
எல்லா வகையான கட்டிடப் பொருட்கள்,
பல்வேறு வகையான துணி வகைகள்,
வாள்சங்கிலிகள் ·063 அங். தடிப்பு; 4.04 அங். ஆழம்; 36" அங். நீளமுள்ள வழிச்சட்டங்களில் பயன்படுத்துவதற்கு,
அலுவலக உபகரணங்கள்,
விசிறு கருவிகள்,
வெஸ்பா டயர்கள்,
திரைகளுக்கான கம்பித் தடிகள்,
சங்கிலி வாள் அரங்கள் 7/32" அங்குலம்,
பெண்களுக்கும் ஆண்களுக்குமான சப்பாத்துக்களும் சான்டல்களும்,
சேட்டுக்கள்,
பெண்களுக்கான அரைக் கச்சைகள்,
காற்சட்டைகள்,
உதைபந்துகள்,
மேலாடைகள், உள்ளாடைகள், எல்லா வகையான றெடிமேட் உடுப்புக்கள்,
பைசிக்கிள் வண்டிகளும் அவற்றின் உதிரிப் பாகங்களும்,
தொப்பிகள்,
குல்லாய்கள்,
தட்டையான கம்பி வடங்கள் 3.029 மி. மீ. தடிப்புள்ளவை,
வெல்டிங் (ஒட்டும்) யந்திரங்கள்,
கம்பித் தடிகளுக்கான கொளுக்கிகளும் சாவிகளும்,
எல்லா வகையான மின்சார சாதனங்கள்,
கைக்கடிகாரங்கள்,
காப்புகள்,
கசெற் சி 60 & சி 90,
மோட்டார் வண்டி ஜாக்குகள்,
(ஒலிவ் எண்ணெய் உட்பட) எல்லா வகையான தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளும்.
மட்பாண்டங்கள் (பிங்கான்கள்),
படுக்கை விரிப்புக்கள்
தலையணை உறைகள், மற்றையனவும்.

விலை (C. I. F.), காப்புறுதி, கப்பற் கட்டணம் முதலியவை உட்பட விலைக்கூற்றும், சாம்பிள்களும் அஞ்சல் அலுவலகம் மூலம் விமானப் பொதி அஞ்சலில் நேரடியாகப் பின்வரும் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்:-

## Taofiki Taokeed & Sons,

SW 8/427 B, Ayankoya Street,
Oke-Ado, Ibadan, WESTERN NIGERIA.

ADVT. 964/74/0/I.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன் கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை, காங்கேசன்துறைவீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில்
19—7—74 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம்; ஆசிரியர்: மு. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org